## இணைப்பு-II

*(156 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## அறிவிப்புகள்

### தொடக்கக் கல்வி

★ தொடக்கக் கல்வித் துறையில் நிர்வாகம் மற்றும் கல்வி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்களில் 50 விழுக்காடு நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும்.

★ தொடக்கக் கல்வித் துறையில் காலியேற்படவுள்ள 5,553 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும், 2,611 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் 55 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களும் உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் காலியேற்படும் 851 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் 3,875 பட்டதாரி தமிழாசிரியர் பணியிடங்களும் 738 சிறப்பாசிரியர் பணியிடங்களும் ஆக 13,683 பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும்.

★ முன்னுரிமை இருந்தும் இதுவரை நியமனத்திற்குத் தகுதிபெறாத பொருளாதாரம், வணிகவியல் போன்ற பாடங்களில் 1-1-2007 அன்றைய நிலவரப்படி பட்டம் பெற்றவர்களை நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களாகவும், பட்டதாரி ஆசிரியர்களாகவும் ஆக்க பதவி உயர்வு அளிக்கப்படும்.

★ ஆசிரியர்களின் வைப்பு நிதிக் கணக்கினை மாநிலக் கணக்காயரே ஏற்று பொது வைப்பு நிதி போன்ற கணக்கினைப் பராமரிக்கவும், கணக்குச் சீட்டு அளிக்கவும் வேண்டும் என்று மாநிலக் கணக்காயரைக் கேட்டுக் கொள்ளப்படும்.

★ தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு தனியாக அனைத்து வசதிகளுடன் கட்டடம் ஒன்று ரூ. 75 இலட்சத்தில் கட்டப்படும்.

[2007 ஏப்ரல் 9

## பள்ளிக் கல்வி

★ பள்ளிக் கல்வித் துறை அலுவலர்களுக்கு மேலாண்மைப் பயிற்சி வழங்க மாநில கல்வி மேலாண்மை மற்றும் பயிற்சி நிறுவனம் (State Institute of Educational Management and Training) தொடங்கப்படும். அதற்கு ரூ. 3 கோடி அளவில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்மூலம் செலவிடப்படும்.

★ தமிழ்நாட்டிலுள்ள 371 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடம், குடிநீர் வசதி, ஆய்வகம், கழிவறை வசதி, சுற்றுச் சுவர் மற்றும் தளவாடச் சாமான்களுக்காக ரூ. 243 கோடி நபார்டு வங்கியிலிருந்து பெறப்பட்டு பயன்படுத்தப்படும்.

★ நபார்டு மூலம் இதுவரை பயனடைந்துள்ள 1,583 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 15,845 வகுப்பறைகளுக்குத் தளவாடச் சாமான்கள் வாங்க ரூ. 69.11 கோடி நிதி வழங்க நபார்டு ஒப்புதல் பெறப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

★ நபார்டு மூலம் பயனடைந்த 581 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 632 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ரூ. 8.66 கோடி நபார்டு வங்கியிலிருந்து பெறப்பட்டு அறிவியல் கருவிகள் வாங்கி விநியோகிக்கப்படும்.

★ 500 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு கணினி ஆய்வகம் நபார்டு வங்கி உதவியுடன் ரூ. 35.75 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

★ நூறு விழுக்காடு தேர்ச்சி விகிதம் காட்டிய அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாநில பெற்றோர்-ஆசிரியர் கழகம் மூலம் ரூ. 2,000/- வழங்கி பெருமைப்படுத்தப்படும்.

★ யோகா பயிற்சியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்கள் மாணவர்களுக்குக் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

★ வாழ்வியல் திறன்கள் (உடல்நலக் கல்வி, தூய்மை, சுற்றுச்சூழல், மககள்தொகை மற்றும் எய்ட்ஸ் விழிப்புணர்வு) கல்வியினை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அறிமுகப்படுத்தும் திட்டம் ரூ. 50 இலட்சம் செலவில் இவ்வாண்டு துவங்கி நடைமுறைப்படுத்தப்படும்.

2007 ஏப்ரல் 9]

★ மாநில அளவில் வழங்கப்படும் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெறும் நல்லாசிரியர்களுக்கு வழங்கப்படும் தொகை ரூ. 2,000/-லிருந்து ரூ. 5,000/- ஆக உயர்த்தப்படும். இதற்கான செலவு ஆசிரியர் நல நிதியிலிருந்து செலவிடப்படும்.

★ பொது மக்களின் ஒத்துழைப்பையும், ஈடுபாட்டையும் காட்டும்வண்ணம் பள்ளிக் கல்வித் துறைச் சார்பாக மாவட்டங்களில் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்படும். மே மாதத்திற்குள் 5 மாவட்டங்களிலும், ஆண்டு இறுதிக்குள் 6 மாவட்டங்களிலும் இம்மாநாடுகள் நடத்தப்படும்.

★ தொழிற்கல்வியை மேம்பாடு செய்யும்வண்ணம் தற்போதுள்ள நடைமுறைகளை ஆராய்ந்து மாற்றங்கள் ஏற்படுத்த ஆய்வுக் குழு ஒன்று அமைத்து அதன்மூலம் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

★ பள்ளிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ள அமைச்சுப் பணியாளர்களில் தகுதி பெற்றவர்களுக்கு 2 விழுக்காடு அளவு தகுதிக்கேற்ப ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படும்.

**மெட்ரிகுலேஷன் பள்ளிகள்**

★ தமிழ்நாடு முழுவதும் சுமார் 3,538 மெட்ரிக் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. அவற்றை ஆய்வு செய்வதற்காக கூடுதலாக 5 மெட்ரிக் பள்ளிகள் ஆய்வர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். தற்போது 10 ஆய்வர் பணியிடங்கள் உள்ளன.

**ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி**

★ மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு கட்டடப் பணி, பணியிடைப் பயிற்சி, ஆராய்ச்சி மேற்கொள்வதற்கும் கணினி மற்றும் நூல்கள் பெற்றிடவும் ரூ. 30 கோடி வழங்கப்படும்.

★ தருமபுரி மாவட்டம் 9-2-2004-ல் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஏற்கெனவே, கிருஷ்ணகிரியில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (District Institute of Education and Training) செயல்பட்டு வருகின்றமையால், தருமபுரி மாவட்டத்திற்குத் தனியாக ஒரு மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் நிறுவப்படும்.

[2007 ஏப்ரல் 9

★ ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் 39 இளநிலை விரிவுரையாளர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.

★ ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்திற்கான பணி அமைப்பு விதிகள் தனியாக ஏற்படுத்தப்படும்.

★ ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககக் கட்டுப்பாட்டில் பணியாற்றும் விரிவுரையாளர் மற்றும் முதுநிலை விரிவுரையாளர்களுக்கு உயர்கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வு பள்ளிக் கல்வித் துறையில் வழங்குவது போன்று வழங்கப்படும்.

**பொது நூலகம்**

★ தற்போது செயல்படும் 166 பகுதி நேர நூலகங்களின் தகுதியினை உயர்த்தியும், 169 புதிதாகவும் அமைத்து மொத்தம் 335 ஊர்ப்புற நூலகங்கள் திறக்கப்படும். இதற்காக ரூ. 1.34 கோடி நூலக நிதியிலிருந்து செலவிடப்படும்.

★ சென்னையில் நடைபெறும் புத்தகக் கண்காட்சி போன்று எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். முதலாவதாக, மாநிலத்தில் ஐந்து மாநகராட்சிப் பகுதிகளில் உடனடியாக ஏற்படுத்தப்படும்.

★ 5 ஆண்டுகள் பணி முடித்த தொகுப்பூதியத்தில் பணியாற்றும் ஊர்ப்புற நூலகர்கள் முறையான ஊதிய விகிதத்தில் மூன்றாம் நிலை நூலகர்களாக நியமிக்கப்படுவர்.

★ நூலகச் சீரமைப்பு மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டு பொதுமக்களுடைய ஒத்துழைப்பும் உதவிகளும் நூலகத் துறையால் பெறப்படும்.

★ வகுப்பறை நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டு நூலகத் துறையின் உதவியுடன் மாணவர்கள் பயனடையும்வண்ணம் செய்யப்படும்.

★ தமிழகத்தில் உள்ள 30 மாவட்ட மைய நூலகங்களில் வாசகர்களின் பயன்பாட்டிற்கென கணினிகளின் எண்ணிக்கையை அதிகரித்து, தனி இணைய வலைப் பிரிவு (Internet Browsing Section) ஏற்படுத்தப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2007 ஏப்ரல் 9]

**அனைவருக்கும் கல்வி இயக்கம்**

- ★ மாணவர்களுக்குத் தரமான கல்வியைக் கொடுக்க "படிப்பும் இனிக்கும்" என்ற திட்டம் இந்த ஆண்டு அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

- ★ இவ்வாண்டு தொடங்கப்படும் 210 தொடக்கப் பள்ளிகளுக்கும் 338 நடுநிலைப் பள்ளிகளுக்கும் 758 புதிய ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்படும்.

- ★ பணி நிறைவு பெற்ற ஆசிரியர்கள் அல்லது தாமாக முன்வரும் ஆசிரியர்கள் மற்றும் படித்த இளைஞர்களைக்கொண்டு "கோடைக்கால பயிற்சி முகாம்" சுமார் 12 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும்வண்ணம் நடத்தப்படும்.

- ★ பள்ளிச் செல்லாக் குழந்தைகளுக்காக ஏற்படுத்தப்பட்டு, சிறந்த முறையில் செயல்பட்டுவரும் 37 கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயங்கள் மேலும் 16 இடங்களில் தொடங்கப்படும்.

- ★ மாணவர்கள் பயன்பெறும்வண்ணம் அந்தந்த மாவட்டங்களில் நடந்த வரலாற்று நிகழ்வுகள் மற்றும் அமைவிடங்கள் சார்ந்த சிறு கதைப் புத்தகங்கள் பள்ளிகளுக்கு வழங்கப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS